## *DEPOSITION OF WITNESSES*

### *(Chapter XXIII code of Criminal Procedure)*
### *IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

### *S.C. NO :18/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 1 |
| Name | : | திருமதி. பவனா என்ற பவுனு |
| Father's / Husband's Name | : | அடைக்கன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 06.11.2020 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.11.2020.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது கொன்னையம்பட்டி, பொன்னமராவதி தாலுகாவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு தற்போது வயது 35. அய்யாவு 1-வது எதிரிக்கு ராசு 2-வது எதிரி உடன் பிறந்த அண்ணன். 3-வது எதிரி பெரியக்கா 1 மற்றும் 2 எதிரிகளுக்கு தாயார். 2-வது எதிரி ராசு ரோடு கான்ட்ராக்ட் எடுத்து வேலை செய்வார். அவருடன் நானும் ரோடு வேலைக்கு செல்வேன். அவ்வாறு ரோடு வேலைக்கு செல்லும்போது, நான் ராசுவின் தம்பியான அய்யாவு @ முத்துபழனியுடன் பேசி பழகிவந்தேன். பங்குனி மாதம் 2012-ம் வருடம் பொங்கல் திருவிழா நடைபெற்றது. என்னுடைய அண்ணன் திருவிழாவிற்கு சென்றுவிட்டார். நான் மட்டும் ஓலைகுடிசையில் இருந்தேன். இரவு 11 மணியளவில் 1-வது எதிரி அய்யாவு அந்த ஓலைக்குடிசைக்கு வந்தார். என்னிடம் சத்தியமாக உன்னை திருமணம் செய்துகொள்வேன் என்று சொன்னார். பின்னர்

என்னை கெடுத்துவிட்டார். நான் முடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே என்னை கெடுத்துவிட்டார். பலமுறை அவ்வாறு தனிமையில் வந்து என்னுடன் உடலுறவுகொண்டார். கார்த்திகை மாதம் 2014-ம் வருடம் நான் வீட்டில் முடியாமல் படுத்திருந்த போது 1-வது எதிரி அய்யாவு என்னை கெடுக்க வந்தார். (தற்போது சாட்சி மாற்றி கார்த்திகை மாதம் 2014-ம் வருடம் நான் வீட்டில் முடியாமல் படுத்திருந்தேன். அப்போது இரவு 11 மணியளவில் அய்யாவு 1-வது எதிரி வந்து என்னை கெடுத்தார். அப்போது நான் ஐயோ, அம்மா என்று கத்தினேன். அப்போது என்னுடைய அண்ணனும், அக்காவும் ஓடிவந்தார்கள். அவர்கள் இருவரும் வந்தவுடன் அய்யாவு ஓடிவிட்டார். என் அண்ணனும், அக்காவும் என்னிடம் என்ன விவரம் என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் அய்யாவு 1-வது எதிரி என்னை கெடுத்துவிட்டு ஓடியதாக சொன்னேன். எனக்கு உடம்பு சரியில்லை என்று என்னுடைய அண்ணனும், அக்காவும் பொன்னமராவதி மதியழகன் மருத்துவரிடம் அழைத்துச்சென்றார்கள். அங்கு மருத்துவர் நான் 4 மாதம் கருவுற்றிருப்பதாக சொன்னார்கள். நாங்கள் அதாவது நான், என் அக்கா, அண்ணன் எல்லோரும் அய்யாவு என்ற முத்துப்பழனி வீட்டிற்குச் சென்றோம். நான் கருவுற்றிருக்கும் விவரத்தை சொன்னோம். அதற்கு 2-வது எதிரியும், 3-வது எதிரியும் 1-வது எதிரிக்கு நான் ஏற்ற பெண் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். முடியாது என்று சொல்லிவிட்டார்கள். 1-வது எதிரியான அய்யாவு என்ற முத்துப்பழனியும், அவரது அண்ணன் ராசுவும் அருவாளால் என்னை வெட்ட வந்தார்கள். அவரது அம்மா தேவடியா, தட்டுவாணி, பிச்சக்காரி என்று பேசினார்கள். அன்றையதினமே நாங்கள் ஊர்க்கூட்டம் போட்டோம். என்னுடைய சித்தப்பா, பெரியப்பாவை வைத்து பேசினோம். 1-வது எதிரியான அய்யாவு என்ற முத்துப்பழனி ரூ.50,000/-ம் தருகிறேன் குழந்தையை அபாஷன் செய்துவிடு என்று சொன்னார். நான் காவல்நிலையத்தில் புகார்கொடுக்கிறேன் என்று சொன்னேன். மீண்டும் அவர்கள் வம்பு செய்தார்கள். பின்னர் நாங்கள் காரையூர் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். அந்த புகாதை தட்டச்சு செய்து கொடுத்தோம். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் அ.சா.ஆ.1. நான் 4 மாத கர்ப்பமாக புகார்கொடுக்கும் சமயத்தில் இருந்தேன். தற்போது எனக்கு பெண்குழந்தை பிறந்துவிட்டது. அதற்கு தற்போது 7 வயதாகிறது. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:-**

நான் போலீசாரிடம் புகார்கொடுக்கும்போதும், என்னை விசாரணை செய்தபோதும் 2-வது எதிரி ரோடு கான்ட்ராக்ட் வேலை செய்ததாகவும், அவரிடம் நான் வேலைக்கு சென்றதாகவும் சொன்னேனா என்றால், நான் சொன்னேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 1-வது எதிரி அய்யாவுடன் ரோடு வேலைக்கு செல்லும்போது பழகிய விவரத்தை புகார் கொடுக்கும்போதும், என்னை விசாரணை செய்தபோதும் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன விவரமான 2012-ல் பங்குனி மாதம் பொங்கல் திருவிழா சமயத்தில் என் அண்ணன் குடும்பத்தார் திருவிழாவற்கு சென்றுவிட்டதாகவும், நான்மட்டும் ஓலைகுடிசையில் இருந்தசமயம் 1-வது எதிரி இரவு 11 மணிக்கு வந்து என்னை திருமணம் செய்துகொள்வதாக சத்தியம் செய்துகொடுத்து என்னை கெடுத்துவிட்டதாக நான் என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் கார்த்திகை மாதம் 2014-ம் வருடம், இரவு 11 மணியளவில் நான் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருந்தபோது, 1-வது எதிரி அய்யாவு வந்து என்னை கெடுத்தார் என்றும், நான் ஐயோ, அம்மா என்று சத்தம் போட்டேன் என்றும், எதிரி ஓடிவிட்டார் என்றும், அப்போது எனது அண்ணனும், அக்காவும் ஓடிவந்தார்கள் என்றும், நான் அவர்களிடம் நடந்த விவரத்தை சொன்னேன் என்றும் நான் என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் மதியழகன் பொன்னமராவதியில் கிளினிக் வைத்துள்ளார். அந்த மருத்துவமனை பெயர் விக்னேஷ் மருத்துவமனை. என்னை பரிசோதனை செய்துவிட்டு மருத்துவர் நான் 4 மாத கர்ப்பமாக இருப்பதாக சொன்னார் என்றால் சரிதான். நான் உடனே என் அக்கா, அண்ணன் ஆகியோருடன் 1-வது எதிரி அய்யாவு வீட்டிற்கு சென்று நான் கர்ப்பமாக இருப்பதை சொன்னவிவரத்தை நான் என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் 2-வது எதிரி ராசுவும், 3-வது எதிரி பெரியக்காவும் 1-வது எதிரிக்கு ஏற்ற பெண் நான் இல்லை என்று சொன்ன விவரத்தை நான் என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

அதேபோல் 1-வது எதிரியும், 2வது எதிரியும் என்னை அருவாளைக்கொண்டு வெட்ட வந்ததாகவும், 3-வது எதிரி முதல்விசாரணையில் சொன்ன கெட்ட வார்த்தைகளில் திட்டிய விவரத்தையும் நான் என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் ஊர்பஞ்சாயத்திற்கு பிறகு என்னுடைய சித்தப்பாவையும், பெரியப்பாவையும் வைத்து 1-வது எதிரியிடம் பேசியபோது அவர் ரூ.50,000/-ம் கொடுப்பதாகவும், குழந்தையை கலைத்துவிடும்படி சொன்ன விவரத்தை நான் என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரச்சினை சம்மந்தமாக ஊர்க்கூட்டம் இரண்டு மூன்று நாட்கள் நடந்தது. கூட்டத்தில் 1-வது எதிரி அய்யாவு என்னை திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று கேட்டேன். அந்த கூட்டத்தில் 1-வது எதிரி கர்ப்பத்திற்க காரணம் தான் இல்லை என்றும், திருமணம் செய்துகொள்ளமுடியாது என்று மறுத்துவிட்டார் என்றால் சரிதான். 1-வது எதிரி கர்ப்பத்திற்கு காரணம் தான் இல்லை என்று சொன்னதால் 2-வது எதிரியும், 3-வது எதிரியும் திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளமுடியாது என்று சொல்லவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். பஞ்சாயத்து செய்தவர்களும் யாரும் ஒத்துக்கொள்ளாததால் நீங்கள் காவல்நிலையம் செல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். ஊர்கூட்டம் போடுவதற்கு முன்புதான் நாங்கள் நேரடியாக 1-வது எதிரி வீட்டிற்குச் சென்று கேட்டோம் என்றால் சரிதான். நாங்கள் கேட்டதற்கும், ஊர்க்கூட்டம் போட்டதற்கும் சுமார் இடைவெளி 2 மாதம் இருக்குமா என்றால் இருக்கும். ஊர்க்கூட்டத்திற்கு பிறகு ஒருமாதம் கழித்து காவல்நிலையம் சென்றிருப்பேனா என்றால், இருக்கும். காவல்நிலையத்திற்கு நான், என் அண்ணன், அக்கா, பஞ்சாயத்தார்கள் சென்றோம் என்றால் சரிதான். அங்கு காரையூர் போலீசார் இருந்தார்கள். அங்கு 1-வது எதிரியை எனக்கு திருமணம் செய்துவைக்கவேண்டும் என்று புகார்வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தை போலீசார் எழுதிக்கொண்டார்களா என்றால், எழுதிக்கொண்டார்கள். அதை என்னிடம் படித்துகாண்பித்து கையெழுத்து பெற்றார்களா என்றால் கையெழுத்து பெற்றார்கள். அதில் என் அண்ணன், அக்கா, பஞ்சாயத்தார்கள் சாட்சி கையெழுத்து போட்டார்கள். போலீசார் நடவடிக்கை எடுப்பபதாக சொன்னார்களா என்றால், ஆமாம். போலீசார் 1-வது எதிரியை காவல்நிலையம் வரவழைத்து

விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். 1-வது எதிரி விசாரணைக்கு வரவில்லை. நான் காவல்நிலையத்திற்கு 4, 5 முறை சென்றிருப்பேன். போலீசார் ஒவ்வொரு முறையும் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு முறையும் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. நான்தான் புகாரை தட்டச்சு செய்து கொடுக்கவேண்டும் என்று சொன்னேன். தட்டச்சு செய்யும்போது நானும், என் அக்கா, அண்ணன் உடன் சென்றோம். காரையூரில் புகாரை தட்டச்சு செய்தோம். நான் புகாரை ஆய்வாளரிடம் கொடுத்தேன். நான் புகாரில் தட்டச்சு செய்தவுடன் கையெழுத்துபோட்டு எடுத்துச்சென்றேன். அந்த புகாரில் என் அண்ணனும், அக்காவும் சாட்சி கையெழுத்துபோட்டு எடுத்துச்சென்றேன். அந்த புகாரின்மீது போலீசார் நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள். ஒருவாரம் ஆகியும் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் புகார் சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்டேன். போலீசார் நடவடிக்கை எடுக்காததால் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்மனு கொடுத்தேன். ஒருமாத காலம்வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்ததால் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார்மனு கொடுத்தேன். நான் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தபால் மூலமாக அனுப்பினேன். அதை அனுப்பியபிறகுதான் காரையூர் போலீசார் விசாரணை மேற்கொண்டார்கள். போலீசார் இந்த புகார்சம்மந்தமாக மகளிர் காவல்நிலையம்தான் விசாரிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். கல்யாணம் செய்துவைக்க கோரியதால் அதை மகளிர்காவல்நிலையம்தான் விசாரிக்கவேண்டும் என்று காரையூர் போலீசார் சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். மகளிர் காவல்நிலையத்தில் என்னை பலமுறை விசாரணை செய்தார்கள். நான் மகளிர் காவல்நிலையத்தில் நடந்த விவரங்கள் அனைத்தையும் சொன்னேன். போலீசார் மகளிர் காவல்நிலையத்தில் நான் சொன்ன அனைத்து விவரங்களையும் எழுதிக்கொண்டார்கள். நான் அதை படித்துப்பார்த்துவிட்டு கையெழுத்திட்டேனா என்றால், கையெழுத்திட்டேன். என்னுடன் வந்த என் அண்ணன், அக்காவையும் போலீசார் விசாரணை செய்தார்கள். அவர்களும் சாட்சி கையெழுத்துபோட்டார்களா என்றால், போட்டார்கள். மகளிர்போலீசார் விசாரணை செய்தபோதும் எதிரிகள் யாரும் வரவில்லை என்றால், அவர்கள் ஒளிந்துகொண்டார்கள். 2012-ம் வருடம் கோவில்திருவிழாவிற்கு பிறகு பலமுறை உறவுவைத்துக்கொண்ட விவரத்தை நான் கொடுத்த

புகார் மற்றும் போலீசார்விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொங்கல் பண்டிகை கிராமத்திலும், நகரத்திலும் தைமாதம் வரும் என்றால், தை மாதமும் வரும், பங்குனி மாதமும் வரும். பொங்கல் என்பது தைப்பொங்களை குறிக்கும் என்றாலும், அது சூரியன் உதிக்கும்போது பொங்கல் வைப்போம் என்றால் சரிதான். ஓலைகுடிசை வீட்டிற்கும், என் அண்ணன் வீட்டிற்கும் இடையில் சுமார் 10 அடி தூரம் இருக்கும். அந்த ஓலைகுடிசை வீட்டிற்கு மின்விளக்கு உள்ளது. சம்பவ சமயத்தில் எனக்கு சுமார் 25 வயதிருக்கும். பெற்றோர்கள் பார்த்து திருமணம் செய்துவைப்பது, காதலித்து திருமணம் செய்துகொள்வது இரண்டும் எனக்குத் தெரியும். திருமணத்திற்கு முன்பு ஒரு ஆணுடன் உறவுவைத்துக்கொள்வது தவறு என்பது எனக்குத் தெரியும். அவ்வாறு உறவுவைத்துக்கொண்டால் ஒரு பெண்ணிற்கு தலைகுனிவு ஏற்படும் என்ற விவரமும் எனக்குத் தெரியும். நான் ரோடு வேலைக்கு சென்றது 2011-ல்தான். ஊரில் பஞ்சாயத்து செய்யும்போது ஏன் இதற்கெல்லாம் பஞ்சாயத்து வைக்கிறாய் என்று எனக்கு அறிவுரை சொன்னார்கள். நான் 1-வது எதிரியுடன் உறவுவைத்துக்கொண்டது சுமார் 60 முறை இருக்கும். 2011 முதல் 2014-வரை எனக்கும், 1-வது எதிரிக்கும் இடையே எந்த பிரச்சினையும் இல்லை. குழந்தையின் தகப்பனார் யார் என்று DNA அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்கு அதனுடைய ரிசல்ட் தெரியும். அந்த DNA அறிக்கையில் 1-வது எதிரி என்னுடைய குழந்தைக்கு Biological Father இல்லை என்று அறிக்கை வந்துள்ள விவரம் எனக்குத் தெரியாது. எதிரிகள் எங்கள் ஊர்தான். எதிரிகளுக்கு நிலங்கள் உள்ளது. ஒப்பந்த வேலைகள் செய்கிறார்கள். எங்களைவிட நிறைய வசதி வாய்ப்புகள் உள்ளவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் எனக்கு உறவினர்கள். எதிரிகள் வசதி வாய்ப்பு உள்ளவர்கள் என்பதால், அவர்கள் மீது பொய் புகார்கொடுத்தால் 1-வது எதிரி என்னை திருமணம் செய்துகொண்டு நான் வசதியாக வாழலாம் என்று இந்த பொய்யான புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கர்ப்பம் தரித்து என்னுடைய கர்ப்பம் வெளியே தெரியவந்ததால்தான் நான் காவல்நிலையத்தில் புகார்கொடுக்க சென்றேன் என்றால், நான் அதற்கு முன்பும் கொடுத்தேன். தெரிந்தபிறகும் கொடுத்தேன். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை

என்றாலும், எங்கள் குடும்பத்தாருக்கும், 1-வது எதிரி குடும்பத்தினருக்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை என்பதாலும், அந்த விரோதத்தின் காரணமாக போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக புகார்கொடுத்ததற்கு ஆதரவாக பொய் சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு 1-ம் எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும், எந்தஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு 1-ம் எதிரி என்னை திருமணம செய்துகொள்ளவில்லை என்பதை தவிர வேறு எந்த வருத்தமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊருக்கும் காரையூர் காவல்நிலையத்திற்கும் சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கும். திருமயம் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கும் எங்கள் ஊருக்கும் சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும். புதுக்கோட்டைக்கும், எங்கள் ஊருக்கும் சுமார் 60 கி.மீ தூரம் இருக்குமா என்றால், பஸ் கட்டணம் ரூ.30/-.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

## *DEPOSITION OF WITNESSES*

### *(Chapter XXIII code of Criminal Procedure)*
### *IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

### *S.C. NO :18/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 2 |
| Name | : | திருமதி. அம்மாகண்ணு |
| Father's / Husband's Name | : | பழனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 28.12.2020 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.12.2020.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது கொன்னையம்பட்டி, பொன்னமராவதி தாலுகாவில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 எனது தங்கை. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 1-வது எதிரியின்அண்ணன் ராசுவுடன் என்னுடைய தங்கை ரோடு கான்ட்ராக்ட் வேலைக்கு செல்வது வழக்கம். அந்த சமயத்தில் எனது தங்கைக்கும் 1-வது எதிரி அய்யாவுக்கும் பழக்கம் ஏற்பட்டது. 2014-ம் வருடம் பங்குனி மாதம் அப்பாச்சியம்மன் கோவிலில் திருவிழா நடந்தது. அன்று நாங்கள் கோவிலுக்கு சாமிகும்பிட சென்றுவிட்டோம். அப்போது 1-வது எதிரி அய்யாவு என் தங்கை பவுனாவை கூரைவீட்டில் வைத்து கெடுத்துவிட்டதாக என் தங்கை 4 மாதங்கள் கழித்து சொன்னதன்பேரில் எனக்குத் தெரியும். பின்னர் ஊரில் முக்கியஸ்தர்களை வைத்து ராசு, அய்யாவு மற்றும் அவரது அம்மாவை வைத்து கேட்டோம். 2-வது எதிரி ராசு அதற்கு பணம் வாங்கிகொள்ளுங்கள் திருமணம் செய்துவைக்க முடியாது என்று

சொல்லிவிட்டார். ஊரில் யார் சொல்லியும் கட்டுப்படாததால் நாங்கள் திருமயம் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தோம். அந்த சமயத்தில் எனது தங்கை 4, 5 மாதங்கள் கர்ப்பமாக இருந்தார். நான் யார் காரணம் என்று கேட்டதற்கு 1-வது எதிரி அய்யாவுதான் காரணம் என்று என் தங்கை சொன்னார். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>:-

போலீசார் விசாரித்தபோது 2014-ம் வருடம் பங்குனி மாதம் அப்பாச்சியம்மன் கோவில் திருவிழாவிற்கு சென்றுவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்லியுள்ளேன். அய்யாவு எனது தங்கையை கூரைவீட்டில் வைத்து கெடுத்துவிட்டதாக 4 மாங்கள் கழித்து என் தங்கை என்னிடம் சொன்ன விவரத்தை போலீசாரிடம் நான் சொன்னேனா என்றால், நான் சொன்னேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2-வது எதிரி ராசு எவ்வளவு வேண்டுமானாலும் பணம் வாங்கிக்கொள்ளுங்கள், 1-வது எதிரிக்கு என தங்கையை திருமணம் செய்துவைக்க முடியாது என்று சொன்ன விவரத்தை போலீசாரிடம் நான் சொன்னேனா என்றால், சொன்னேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கோவில் திருவிழா முடிந்து 4, 5 மாதங்கள் கழித்து என் தங்கையிடம் கர்ப்பத்திற்கு யார் காரணம் என்று கேட்டேன் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தங்கை 1-வது எதிரியின் அண்ணனோடு வேலைக்கு சென்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருமயம் காவல்நிலையத்திற்கு சென்று என்தங்கை அனைத்து விவரத்தையும் போலீசாரிடம் சொன்னாரா என்றால், சொன்னார். போலீசார் என் தங்கை சொன்ன விவரங்களை எழுதிக்கொண்டார்களா என்றால், எழுதிக்கொண்டார்கள். காவல்நிலையத்திற்கு நான், என் தங்கை, என் அண்ணன் சென்றோமா என்றால், ஆமாம். போலீசார் எழுதியதில் என் தங்கையிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால், வாங்கினார்கள். அந்த புகார்வாக்குமூலத்தில் நானும் என் அண்ணனும் சாட்சி கையெழுத்து போட்டோமா என்றால், ஆமாம். போலீசார் உடனே நடவடிக்கை எடுத்தார்கள். அதில் திருப்தி ஏற்படாமல்தான் புதுக்கோட்டை காவல் கண்காணிப்பாளரை

சந்தித்தோமா என்றால், ஆமாம். புகார் கொடுத்ததற்கும், காவல் கண்காணிப்பாளர் அலுவகத்திற்கு வந்ததற்கும் இடையே ஒருமாதம் இடைவெளி இருக்குமா என்றால், இருக்கும். கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் எழுதிக்கொடுத்தோமா என்றால், ஆமாம். என் தங்கை சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால், நடந்தது. 1-வது எதிரி கர்ப்பத்திற்கு நான் காரணம் இல்லை, நான் திருமணம் செய்துகொள்ளமுடியாது என்று மறுத்துவிட்டாரா என்றால், ஆமாம். எதிரிகள் எங்களைவிட வசதியானவர்களா என்றால், ஆமாம். அ.சா.1 எனது தங்கை என்பதாலும், எதிரிகள் எங்களை விட வசதியானவர்கள் என்பதாலும், அ.சா.1-ஐவிட்டு பொய்யாக புகார்கொடுத்து, அதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தங்கையால் ஊரில் எங்களுக்கு கெட்டபெயர் என்றால், ஆமாம். என் தங்கையை நான் கண்டித்து கேட்கவில்லை என்றால், கேட்கவில்லை நான் வேலைக்கு சென்றுவிடுவேன். என் அண்ணனும் வேலைக்கு சென்றுவிடுவார். என் தங்கையும் ரோடுவேலை, கூலிவேலைக்கும் சென்றுவிடுவார். என் தங்கை பக்கத்து ஊர்களிலும் வேலைக்கு செல்வார். ரோடுவேலை வெளியூரில் நடக்கும்போது என் தங்கை அந்த ஊரிலேயே தங்கி வேலை பார்த்தார் என்றால், இல்லை. புதுக்கோட்டைக்கும் எங்கள் ஊருக்கும் 50 கி.மீ தூரம் இருக்கும். சில நாட்கள் தங்கி வேலை பார்ப்போம் என்றால் ஆமாம். அப்போது என் தங்கையும் தங்கி வேலை பார்ப்பாரா என்றால் ஆமாம்.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

## *DEPOSITION OF WITNESSES*

***(Chapter XXIII code of Criminal Procedure)***
***IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI***

## *S.C. NO :18/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 3 |
| Name | : | Dr.திருமதி. பூபதி |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 09.02.2021 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.02.2021.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.02.2016 அன்று அரச இராணியார் மருத்துவமனையில் நான் பணியில் இருந்த சமயம் பெண்காவலர் 769 என்பவர் பவனா என்ற பவுனு என்ற 28 வயது பெண்மணியை நீதித்துறை நடுவர், திருமயம் அவர்களின் உத்திரவின்படி பரிசோதனைக்காக வந்தார்கள். நான் அந்த பெண்மணியை பரிசோதித்தபோது அவர் 7 மாத கர்ப்பிணியாக இருந்தார். அவரை விசாரித்ததில் அவர் தெரிந்த நபரான அய்யாவு என்பவர் கடந்த ஒரு வருடமாக தன்னுடன் உடலுறவுகொண்டிருந்ததாக சொன்னார். பொது பரிசோதனையில் அந்த பெண்மணி நார்மலாக இருந்தார். வயிறு பரிசோதனையில் அந்த பெண்மணி 24-லிருந்து 28 வாரம் கர்ப்பிணியாக இருந்தது தெரியவந்தது. குழந்தையின் துடிப்பு நார்மலாக இருந்தது. ஒரு

குழந்தை இருந்தது தெரியவந்தது. நான் அளித்த சான்று அ.சா.ஆ.2. இதுசம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>:-**

அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் பவனா என்ற பவுனு என்ற பெண்மணி அய்யாவு என்ற நபருடன் ஒரு வருடமாக தொடர்பு வைத்திருந்ததாக சொன்னதாக குறிப்பு எழுதியுள்ளேன் என்றால், ஆமாம். 13.02.2014-ம் தேதிதான் அ.சா.1 என்னிடம் அழைத்துவரப்பட்டார் என்றால், ஆமாம்.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

## *DEPOSITION OF WITNESSES*

### *(Chapter XXIII code of Criminal Procedure)*
### *IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

### *S.C. NO :18/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 4 |
| Name | : | Dr.கமலா |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 09.02.2021 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.02.2021.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லாரி மருத்துவமனையில் முதுநிலை உறைவிட மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.12.2016 அன்று புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்த சமயம் காரையூர் தலைமை காவலர் ராமகிருஷ்ணன் என்பவர் அய்யாவு என்ற முத்து பழனி என்பவரை மருத்துவ பரிசோதனைக்காக திருமயம் நீதித்துறை நடுவரின் உத்திரவின் பேரில் அழைத்துவந்தார். நீதித்துறை நடுவரின் உத்திரவில் அந்த நபர் பவனா என்ற பவுனு என்ற நபரை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அதனால் அவருக்கு ஆண்மைத்தன்மை குறித்து பரிசோதனை மேற்கொள்ளும்படி உத்திரவிட்டிருந்ததன் பேரில் நான் அவரை பரிசோதனை செய்தேன். நான் அந்த நபரை ரேடியாலஜிஸ்ட் கருத்துரைக்கும், சைக்கிராலஜிஸ்ட் கருத்துரைக்கும் பரிந்துரைத்து அவர்களிடமிருந்து கருத்துரை பெற்று, பின்னர் அந்த நபரை பரிசோதனை செய்தபின் அந்த

நபர் உடலுறவுகொள்ள தகுதியான நபர் என்று சான்று வழங்கினேன். நான் அளித்த சான்று அ.சா.ஆ.3 வரிசை. இதுசம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>:-**

நான் வழங்கிய அ.சா.ஆ.3 சான்றில் நான் குறிப்பிட்டுள்ளதுபோல் ஒரு பெண்மணியை பாலியல் பலாத்காரம் செய்ததாக குறிப்பு இல்லை, ஆனால் கேஸ்சீட் மற்றும் பரிந்துரை கடிதத்தில் உள்ளது. அந்த பரிந்துரை கடிதத்தை நான் கேஸ்சீட்டுடன் இணைத்துள்ளேன். அதை ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. அந்த கடிதத்தில் உள்ள கேள்விகள் போலீசார் கருத்துரை கேட்ட கேள்விகள் என்றால், ஆமாம்.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

## *DEPOSITION OF WITNESSES*

*(Chapter XXIII code of Criminal Procedure)*
*IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

*S.C. NO :18/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 5 |
| Name | : | திரு. மணிகண்டன் |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 09.02.2021 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.02.2021.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது கொன்னையம்பட்டியில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. நான் 5, 6 வருடங்களுக்கு முன்பு 12 மணியளவில் கொன்னையம்பட்டி ஊருக்குள் எங்கள் ஊர் கோவில் வீட்டிற்கு பக்கத்தில் திருமயம் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் அந்த இடத்தில் இருந்தார்கள். கையெழுத்துபோடச்சொன்னார்கள் நான் போட்டேன். என்னுடன் யார் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. பார்வைமகஜரில் என்ன விவரம் எழுதியுள்ளது என்று எனக்குத் தெரியாது. பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.4.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி, அனுமதி கேட்டதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அ.த.கு.வி.</u>**

போலீசார் விசாரணையின் போது 06.02.2014-ம் தேதி அ.சா.1-ன் வீட்டை பார்த்து போலீசார் எழுதிக்கொண்டு படம் வரைந்தார்கள் என்றாலும், நானும், மாணிக்கம் என்பவரும் அப்போது உடன் இருந்து கையெழுத்து போட்டோம் என்றாலும், தற்போது ரொம்ப நாட்களானதால் மறந்துவிட்டேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*

## *DEPOSITION OF WITNESSES*

***(Chapter XXIII code of Criminal Procedure)***
***IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI***

***S.C. NO :18/2018***

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 6 |
| Name | : | திரு. மாணிக்கம் |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 09.02.2021 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.02.2021.*

**முதல்விசாரணை:-**

நான் 2014-ல் கொன்னையம்பட்டிற்கு விருந்தாளியாக வந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2014-ல் ஒருநாள் 1 மணியிருக்கும் அப்போது பவனா வீட்டிற்கு போலீசார் வந்து பஞ்சாயத்துபோல் பேசினார்கள். பின்னர் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்துபோட்டேன். அங்கிருந்தவர்களிடம் கையெழுத்து கேட்டார்கள், அவர்களும் போட்டார்கள். பார்வைமகஜரில் உள்ள 2-வது கையெழுத்து அ.சா.ஆ.5.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி, அனுமதி கேட்டதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)**

**அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையின் போது 06.02.2014-ம் தேதி அ.சா.1-ன் வீட்டை பார்த்து போலீசார் எழுதிக்கொண்டு படம் வரைந்தார்கள் என்றாலும், நானும், மணிகண்டன் என்பவரும் அப்போது உடன் இருந்து கையெழுத்து போட்டோம் என்றாலும், தற்போது ரொம்ப நாட்களானதால் மறந்துவிட்டேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:-** இல்லை.

**மறுவிசாரணை:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*